**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. No.93/2024**

**PW1**

| | | |
|---|---|---|
| Name | : | செல்வன் |
| Father's/Husband's Name | : | மன்னார் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.07.2025.

A1 and 2 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது செங்கம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.09.2022 ல் மேல்செங்கம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது பகல் 12.30 மணியளவில் உதவி ஆய்வார் தருமன் தலைமையில் நானும் , முதுநிலை காவலர் 1269 சதீஷ் என்பவருடன் உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி செங்கம் - நீப்பத்துறை சாலை அத்திப்பாடி கூட்ரோடில் எதிரிகள் ரவீன்ராஜ் , வினோத் ஆகியோரை பார்த்தபோது அவர்கள் என்னை பார்த்ததும் ஓட முயற்சி செய்தார்கள் . நாங்கள் மடக்கி விசாரித்தபோது அவர்கள் பெயரை சொல்லி தங்களிடம் கஞ்சா இருப்பதாக சொல்லி ஒத்துக்கொண்டார்கள். நாங்கள் அதை கைப்பற்றி சோதனை செய்தபோது ஒரு கருப்பு நிற பிளாஸ்டிக் பையில் 250 கிராம் கஞ்சா இருந்தது. தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தால் நானும், முதுநிலை காவலர் சதீஷ் ஆகியேர் முன்னிலையில் கைற்றுதல் மகசரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.1.** என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவதுதான் அந்த

கைப்பற்றுதல் மகசர். கைப்பற்றப்பட்ட கஞ்சாவை முறையே தலா 25 கிராம் S1, S2 என்று பிரிவு செய்து லேபில் ஒட்டி சீல் வைத்தோம் . தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் பொட்டலங்கள் தான் அவை முறையே **சா.பொ.1 மற்றும் 2.** மீதம் இருந்து 200 கிராம் கஞ்சாவை கருப்பு நிற கவரில் வைத்து P1 என்று லேபில் ஒட்டி சீல் வைத்தார். பின்னர் 14 மணி முதல் 14.30 வரை எதிரி வினோத் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது . அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், முதுநிலை காவலர் சதீஷ் என்பவரும் கையொப்பம் செய்தோம் . எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் மாலை 16 மணிக்கு காவல் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 250/2022 சட்டப்பிரிகள் 8(c) உ/இ 20(b)(ii), (A) NDPS Act 1985 r/w இதச 328,511 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது . இந்த வழக்கை பதிவு செய்ய உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை- இல்லை.**

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B. C. Gopinath**

Additional District Judge,

Tiruvannamalai.